Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 7 / 2023
**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name: | மோனிஷ் | Calling: | தனியார் வங்கி |
| Father's Name: | ஆனந்தன் | Religion: | இந்து |
| Village: | கொத்தகோட்டை | Age: | 34 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.05.2024

| |
|---|
| SIGN : |

(1 முதல் 5 எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டது. மனு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா. 3 முதன்மை விசாரணை

எதிரிகள் அனைவரையும் தெரியும். அசா1 எனது தந்தை ஆவார். அசா2 எனது தம்பி ஆவார். 11.07.2021ம் தேதி காலை 07.30 மணிக்கு எனது வீட்டிலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள எங்கள் நிலத்திற்கு களை கொத்துவதற்காக நானும் எனது அப்பா ஆனந்தன், அம்மா ராணி, தம்பி அரவிந்த் குமார், தம்பி மனைவி மீனா ஆகியோர் சென்றிருந்தோம். அப்போது எங்கள் நிலத்திலிருந்த முருங்கை மரம், பொன்னா மரத்தில் இருந்த கிளைகளை வெட்டி கொண்டிருந்தார். அதை மணியும், தேவராஜின் மனைவி கோகிலாவும் எடுத்து கொண்டிருந்தார்கள். அது குறித்து எனது தந்தை அசா1 எங்கள் நிலத்தில் உள்ள மரக்கிளைகளை ஏன் வெட்டுகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு எதிரி தேவராஜ் கிளைகளை எவ்வாறு வெ ட்டுகிறேனோ, அவ்வாறு உங்களை வெட்டிவிடுவேன் என்று சொன்னார். உங்களால் என்ன புடுங்க முடியுமோ புடுங்கிக்கொள்ளுங்கள், யாரிடம் வேண்டுமானாலும் சொல்லிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்.

தேவராஜின் பெரியப்பா சிவலிங்கம் ராடை எடுத்து வந்து எனது அப்பாவின் தலையின் பின்னார் அடித்தார். மரத்திலிருந்து கீழே இறங்கிய தேவராஜ் ராடால் எனது கை மீது அடித்தார். எதிரி சிவலிங்கம் கல்லால் எனது நெஞ்சின் மீது அடித்தார். எதிரி சிவலிங்கம் எனது தம்பியின் இடது கண்ணுக்கு கீழே குத்தினார். அதே ராடால் என் தம்பியின் இடது கை மீதும் அடித்தார். எனது தந்தையை அடிக்கும்போது தடுக்க சென்றபோது எதிரி சிவலிங்கம் எங்கள் இருவரையும் அடித்தார். எங்களை ஏன் அடித்தீர்கள் என எனது தம்பி மனைவி மீனா எதிரி கோகிலாவிடம் கேட்டபோது மீனாவை தலைமுடியை பிடித்து வளைத்து கீழே தள்ளி வயிற்றின் மீது உதைத்தார்.

எதிரிகள் மணி, தேவராஜ், சிவலிங்கம், வேல்முருகன், கோகிலா ஐவரும் இதே போல் பேசி கொண்டிருந்தீர்கள் என்றால் அடித்து கொன்றுவிடுவோம் என கூறினார். எதிரி வேல்முருகன் கல்லால் எனது தந்தை நெஞ்சின் மீது அடித்தார். அதனால் எனது தந்தை மயக்கமாகி விழுந்தார். அவரை சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சம்பவத்தில் அடிப்பட்ட எனக்கும், தம்பி அரவிந்த் குமார, தம்பி மனைவி மீனா ஆகியோருக்கும்அடிப்பட்டதற்காக வலி தாங்க முடியாமல் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். போலிசார் வந்து விசாரித்தார்கள். எனது தந்தை போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தார். என்னையும் விசாரித்தார்கள்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணைக்கு வாய்தா கேட்டு அது இந்நீதிமன்றத்தால் நிராகரிக்கப்படுகிறது.)

சாட்சி கையொப்பம்
(ஒம்.) மோனிஷ்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.